Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# சிலப்பதிகாரத்தில் மெய்ப்பாடுகள்

ப.ரூபவதி, ஆய்வு உதவியாளர்
(தமிழக அரசின் நல்கை உதவி ஆய்வுத் திட்டம்),
இசைத்துறை,
தமிழ்ப் பலக்லைக்கழகம், தஞ்சாவூர்.

74

**ஆய்வுச் சுருக்கம்**

தொன்மை நிறைந்த இலக்கண நூலான தொல்காப்பியத்தில் விளக்கப்பட்டள்ள மெய்ப்பாடுகள் கலை உலகத்தில் முக்கியமான ஒன்றாகத் திகழ்ந்து வருகின்றது. மெய்ப்பாடுகள் என்பது மனதில் தோன்றும் கருத்துகளை எதிரே இருப்பவருக்கும் தெரிவிப்பதாகும். இதற்கென தொல்காப்பியத்தில் மெய்ப்பாட்டியல் எனும் தனித்த ஒரு இயலை நமக்கு வழங்கியுள்ளார் தொல்காப்பியர். இவர் கூறியுள்ள மெய்ப்பாடுகளை ஐம்பெருங்காபியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தை முன்வைத்து காப்பியத்தில் வரும் முக்கிய கதாப்பாத்திரங்கள், துணைமைப் பாத்திரங்கள் என அனைவரின் உணர்வுகளையும் எவ்வாறு இளங்கோவடிகளார் விளக்கியுள்ளார் என்பதை அறிவதே இக்கட்டுரையாகும்.

**ஆய்வு நோக்கம்**

பொதுவாக பாடல்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு மெய்ப்பாடுகள் வெளிக்காட்டப்படுகின்றன. ஆனால் நாடகக் காப்பியமான சிலப்பதிகாரக் காப்பியத்தின் கதையினை முன்வைத்து தொல்காப்பியர் கூறிய மெய்ப்பாடுகள் இங்கு இணைத்துப் பார்க்கப்படுகிறது. மெய்ப்பாடுகள் என்பவை இயல், இசை, நாடகம் எனும் மூன்றிற்கும் பொதுவானது என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

தொல்காப்பியரால் விளக்கப்பட்ட எண்வகை மெய்ப்பாடுகள் தமிழ் இலக்கிய உலகிலும், நாட்டிய உலகிலும் முக்கிய அங்கமாக இருந்துவருகின்றது. இங்கு மெய்ப்படுகளற்று இருப்பவை உணர்வற்றைகளாகக் காணப்படும். இம்மெய்ப்படுகளை இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட சிலப்பதிகாரத்தில் உள்ள நாடகப் பாத்திரங்களோடுப் பொருத்திப் பார்த்து அவர் பயன்படுத்தி மெய்ப்பாடுகளின் பயன்பாடுகளையும், அவற்றின் ஆழத்தைப் பற்றியும் விவரிப்பதே இக்கட்டுரையாகும்.

**மெய்ப்பாடுகள்**

தமிழின் மூத்த இலக்கண நூலான தொல்காப்பியத்தில் உள்ள பொருளதிகாரத்தில் ஓர் தனி இயலாக மெய்ப்பாடுகளை விளக்கும் இயல் அமைந்துள்ளது. மெய்ப்பாட்டியல் தொல்கப்பியத்திலுள்ள ஆறாவது இயலாகும். மெய்ப்பாட்டியல் என்பதனை மெய்மை + பாடு + இயல் எனப் பிரிக்க இயலும். அதாவது, மனதில் தோன்றும் கருத்துகளை அல்லது உணர்வுகளை எதார்த்தமாகவும் தத்ரூபமாகவும் வெளிப்படுத்துதல் தொடர்பான இலக்கணங்களை விளக்கும் இயலாக அமைகிறது. மொழிகள்

தோன்றும் முன்பிருந்த மனித இனம் தனது உள்ளத்தில் தோன்றும் கருத்துக்களை உடல் வழியாக வெளிக்காட்ட சைகை மொழிகளையே, அதாவது மெய்ப்பபடுகளையே பயன்படுத்திருப்பர்.

**உய்த்துணர் வின்றித் தலைவரு பொருண்மையின்**

**மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடாகும்** (தொல்.பொருளதிகாரம்.196)

என்பதே மெய்ப்பாட்டியலின் இயல்பு என்கிறார் தொல்காப்பியர். செய்யுள்களுக்குரிய முக்கிய உறுப்பாக மெய்ப்பாடுகள் விளங்குகின்றன. தொல்காப்பியத்தின் உரை ஆசிரியர்கள் பொதுவாக மெய்ப்பாட்டினைச் சுவை என்றே குறிப்பிடுகின்றனர். சுவை என்பதே இரசத்தின் தமிழாக்கம். தொல்காப்பியர் மெய்ப்பாடு என்பதை வினைய நிமித்தம் எனக்குறிக்கின்றார். உரையாசிரியர்கள் மெய்ப்பாட்டியலை அவத்தை (மனநிலை) என்றுக் கூறுகின்றனர்.[1] **"உய்ப்போன் செய்தது காண்போர்க்கு எய்துதல் மெய்ப்பா டென்ப மெய்யுணர்ந் தோரே"** என்கிறது செயிற்றியம்.

**எண்வகை மெய்ப்பாடுகள்**

மெய்ப்பாடுகளை தொல்காப்பியர் தனது நூலில் அடிப்படையாக எட்டு வகைகளாக வகைப்படுத்தியிருக்கிறார். அதாவது,

**நகையே அழுகை. இளிவரல் மருட்கை**

**அச்சம் பெருமித வெகுளி உவகையென்று** (தொல்.மெய்.247)

என்கிறார் தொல்காப்பியர். நகை (சிரிப்பு), அழுகை (துயர்), இளிவரல் (இழிவு), மருட்கை (வியப்பு), அச்சம் (பயம்), பெருமிதம் (வீரம், பெருமை), வெகுளி (சினம்), உவகை (மகிழ்ச்சி) என வகைப்படுத்துகிறார். இவ்வெட்டு மெய்ப்பாடுகளும் அவை தோன்றும் நிலைகளைப் பொருத்து இன்னும் பல முறைகளில் வகைப்படுகிறது. மொத்தம் 149 மெய்ப்பாட்டு வகைகள் உள்ளன. மேற்கூறிய எட்டு மெய்ப்பாடுகளும் பொதுவாக ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டவைகளாக இருக்கும். எடுத்துக்காட்டாக, வியப்பினைத் தொடர்ந்து பயம் உருவாகுதல், வீரத்தைத் தொடர்ந்து கோபம் உருவாதல் போன்று ஒவ்வொன்றும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டுள்ளன.

**நாட்டிய இலக்கண நூல்களில் உள்ள மெய்ப்பாடுகள்**

அடவுகளும் அபிநயங்களும் இணைந்ததே நாட்டியம். மனக்கருத்துகளை வெளிக்காட்டுவதே அபிநயம். இது குறித்து பலதரப்பட்ட நாட்டிய இலக்கண நூல்கள் விளக்குகின்றன. பரத முனிவரால் இயற்றப்பட்ட நாட்டிய சாஸ்திரத்தில் இரசக்கோட்பாடு பற்றி விளக்கப்பட்டுள்ளது. நாட்டிய சாஸ்திரத்தில் ஒன்பது வகையாக இரசங்கள் பகுக்கப்பட்டுள்ளது. அதாவது, சிருங்காரம், வீரம், கருணை, ஹாஸ்யம், பயானகம், அத்புதம், ரௌத்திரம் , பீபத்ஸ்யம், சாந்தம். இவற்றை நவரசம், ஒன்பான் சுவை, தொண்சுவை என்றும் அழைப்பர். இவை ஒன்பதும் அபிநயதர்பணத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றிலுள்ள சாந்தம் எனும் இரசம் தொல்காப்பியரின் மெய்ப்பாட்டியலில் இல்லை. மெய்ப்பாடுகளுக்கும், இரசங்களுக்கும் ஒற்றுமைகள் இருந்தாலும் சில தன்மைகள் இவ்விரண்டையும் வேறுபடுத்திக் காட்டுகின்றது. "மெய்ப்பாடும் இரசமும் கருத்தளவில் முழுவதும் பொருந்தும்" எனக் கூறல் இயலாது என சுப்பு ரெட்டியார் கவிதயனுபவம் எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். எடுத்துக்காட்டாக, மெய்ப்பாடு என்பது பொருள் பற்றியது, இரசம் சுவைப் பற்றியது. இருப்பினும் இவை இரண்டுமே உணர்வுகள் சார்ந்தது. அபிநயதர்பணம், பரதசேனாபதியம்

போன்ற நாட்டிய நூல்களிலும் உணர்வுகள், உணர்ச்சி வெளிப்பாடுகள் குறித்த குறிப்புகள் உள்ளன.

**சிலப்பதிகாரம்**

சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றானதும், சாதராண குடிமக்களின் வாழ்க்கை விவரிக்கும் நூலாகவும் உள்ள தமிழின் சிறந்த நாடகக் காப்பியமாகும். இந்நூல் மக்களின் வாழ்வியல் நெறிமுறைகளையும், கலைத் தொடர்பான பல விடயங்களையும் நமக்கு அள்ளித்தருகிறது. சிலப்பதிகாரம் ஓர் துன்பியலான முடிவினைக் கொண்டுள்ள காப்பியம். இவற்றுள் வெளிப்பட்டுள்ள அதாவது ஆசிரியரால் வெளிக் காட்டப்பட்டுள்ள கதாப்பத்திரங்களின் வழி மெய்ப்படுகளைப் பின்வருமாறு காணலாம்.

**நகை**

நகை என்பது மெய்ப்பாடுகளில் முதலாவதாக உள்ளது. இதற்கு சிரிப்பு என்பது பொருள். எதிர்மறையான முடிவினைக்கொண்ட இக்காப்பியத்தில் ஒரு சில இடங்களிலேயே நகை எனும் மெய்ப்பாடு வெளிப்பட்டுள்ளது.

**மன்பெருஞ் சிறப்பின் மாநிதிக் கிழவன்**
**ஏற்றெழுந் தனன்யா னென்றவள் கூற** (கொலைக்களக்காதை 75-80)

எனும் வரிகள் கண்ணகியின் பொய்மை கலந்த நகையை (புன்முறுவல்) விளக்குகிறது. கண்ணகியிடம் கோவலனின் தாயும், தந்தையும் கணவனைப் பற்றி விசாரிக்கையில் கோவலனால் தனக்கு ஏற்பட்ட மனவருத்தங்களை அவர்களிடம் வெளிக்காட்டாமல், புன்முறுவல் செய்கிறாள் கண்ணகி. வேதனைகள் கலந்த அச்சிறு சிரிப்பே அவளது கவலைகளைக் காட்டுகிறது.

**பாடமை சேக்கையுட் புக்குத்தன் பைந்தொடி**
**சிலம்புள கோண்மெனச் சேயிழை கேள** (கானாத்திறம் உரைத்த காதை 67-73)

எனும் வரிகள் கண்ணகியின் போலியான நகையினை விளக்குகிறது. மாதவியை பிரிந்து கண்ணகியை வந்து சேர்ந்த கோவலன், கண்ணகியிடம் பொருளின்மை, கண்ணகியின் உடல்நிலை, பிரிவு, தனது தவறுகளைக் குறித்து வருந்துகிறான். தனது கணவனின் வருத்தத்தைக் கேட்ட கண்ணகி, முகத்தில் ஓர் ஆறுதலான சிரிப்புடன் மேற்கூறியவற்றால் எனக்கு எவ்வித மனக்கவலைகளும் இல்லை எனவும், நீங்கள் அதுகுறித்து கவலையுற வேண்டாம் எனவும் போலியாகத் தன்னை வெளிக்காட்டுகிறாள்.

**போதுறவு மொழிந்தனன் மூதறிவாட்டியென்**
**விருந்தின் மூர லரும்பின ணிற்ப** (வேட்டுவரி 51-53)

எனும் வரிகள் கண்ணகி வெட்கம் கொண்டு சிரிப்புடன் தனது கணவனின் பின்னால் ஒளிந்துகொள்ளும் காட்சியை விளக்குகிறது. கவுந்தியடிகளுடன் கோவலனும் கண்ணகியும் சென்று கொண்டிருக்கும் பொழுது களைப்பின் காரணமாக வேட்டுவர்களின் ஐயைக்கோட்டத்தில் தங்க நேரிட்டது. அங்கு அவர்களின் விழா நடந்து கொண்டிருக்கையில் வேட்டுவக்குலப் பெண்ணான சாலினியின் மேல் தெய்வமிறங்கிய நிலையில், அவள் கண்ணகியை கைக்காட்டி பல புகழுரைகளைக் கூறுகிறாள். இச்சூழலில் கண்ணகி நாணம் கொண்டு வெட்கச் சிரிப்புடன் கணவனின் பின்னால் ஒளிந்து கொள்கிறாள். இங்கு கண்ணகி கணவன் மேல் உரிமைக்கொண்டு அவன் பின் சாய்கிறாள்.

இன்னும் ஓரிரு இடங்களில் நகைக் குறித்தானக் குறிப்புகள் சிலப்பதிகாரத்தில் இடம்பெறுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**அழுகை**

நகையைத் தொடர்ந்து வரக்கூடிய மெய்ப்பாடாக அழுகை உள்ளது. இங்கு அழுகை என்பது கவலை, வறுமை, இளிவு போன்றவற்றைக் குறிப்பனவாகிறது. சிலப்பதிகாரத்தில் இம்மெய்ப்பாட்டின் பங்கு அதிகமாக உள்ளது. இதுவே இக்காப்பியத்தின் சிறப்புமாகும்.

மணமான சிறிது நாட்களில் தன்னைப் பிரிந்து சென்ற கணவனை நினைத்து கண்ணகி வருத்துதல், மாதவியுடன் கூடியிருப்பதை அறிந்து துயருருதல், பொருளினை இழந்து துயரத்தோடு கணவனும் மனைவியும் மதுரையை நோக்கி செல்லுதல், கோவலனைப் பிரிந்த மாதவி துயருருதல், செய்யாக் குற்றத்திற்காகச் கொலைச் செய்யப்பட்டதை கண்ணகி அறிதல் என தொடக்கம் முதல் இறுதி வரை பல அவல நிலைகள் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

**இளிவரல்**

இளிவரல் என்பது மூன்றாம் மெய்ப்பாடாகும். இது இழிவு, தாழ்வு போன்ற நிலைகளை குறிக்கும் விதமாக அமைந்துள்ளது. கோவலனை கொல்ல வந்த கொலையாளிகள் அவனை கள்வன் என்று நம்ப இயலாமல், கொல்லனின் நடிப்பைப் பார்த்து குழப்பமடைந்துள்ளனர். அந்நேரத்தில் மயக்கத்திலிருந்த கொலையாளி ஒருவன் கோவலனை வெட்டிவிடுகிறான். இது கொலையாளிகளின் வெட்டு என்பதைத் தாண்டி, கள்வனின் சூழ்ச்சியினால் உருவான வெட்டு எனக் கோவலன் இழிவு நிலையை அங்கு வெளிக்காட்டுகிறான்.

கவுந்தியடிகளுடன் கோவலனும் கண்ணகியும் மதுரையை நோக்கிச் செல்லும் பொழுது, எதிரே பார்த்த வம்பரத்தையும், வறுமொழியாளனும் “இவர்கள் யார் ?” எனக் கவுந்தியடிகளிடம் வினவ, “எம் மக்கள்” எனக் கவுந்தியடிகள் பதிலளித்தார். இதனை இழிவு செய்யும் விதமாக, “உடன் பிறந்தோர் மணந்து வாழ்வது?” என இருவரும் கூறியதற்கு, கவுந்தியடிகள் இவ்விருவரும் இளமை அழிந்து காட்டில் முதுமை கொண்ட நரிகளாக ஊளையிடுவர் எனச் சாபமிட்டு இடங்களில் இளிவரல் மெய்ப்பாட்டினை வெளிக்காட்டுகிறார். இதனை,

**உடன் வயிற் றோர்க ளொருங்குடன் வாழ்க்கை**
**குறு நரி நெடுங்குரற் கூவிளி கேட்டு** (நடுகற் காதை )

எனும் வரிகள் விளக்கிக் காட்டுகின்றன. இதுபோல இன்னும் ஓரிரு இடங்களில் இளிவரல் எனும் இம்மெய்ப்பாடு சிலப்பதிகார காப்பியத்தில் வெளிப்படுகிறது.

**மருட்கை**

மருட்கை என்பது வியப்பு, ஆச்சரியம் எனப்பொருள்படும். புதுமையைக் காணுதல் போன்ற நிலைகளில் மருட்கை எனும் மெய்ப்பாடு பொருள்படுகிறது.

**ஆயர் பாடியின், அசோதைபெற் றெடுத்த**
**விழுமந் தீர்த்த விளக்குக் கொல்லென** (கொலைக்களக்காதை பா. எண்.46-51)

எனும் வரிகள் மாதரியின் ஊர் மக்கள் கண்ணகியின் அழகினை வியந்து பார்ப்பதைப் பற்றி

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

விளக்குகின்றது. கவுந்தியடிகள் கோவலனையும், கண்ணகியையும் மாதரியிடம் விட்டுச்செல்ல, மாதரி இருவைரையும் தனது இல்லத்திற்கு அழைத்துச்செல்கிறார். அப்பொழுது வழி நெடுகிலும் கண்ணகியைக் கண்ட மக்கள் அவளது அழகில் மயங்கி ஆச்சரியமாகப் பார்த்தனர் என்பதன் மூலமாக இங்கு புதுமையைக் கண்டு வியந்த மருட்கை மெய்ப்பாடு வெளிப்படுகின்றது.

தன்னோடு வாழ்ந்த கண்ணகியை தெய்வமாக எண்ணி வழிபடும் தேவந்தி இடத்தில் மருட்கை அழகாக வெளிப்படும். அதாவது தேவந்தி, சிறுவயது முதல் பழகி வந்த தனது தோழியான கண்ணகியின் வாழ்வியல் நெறிகளைக் கண்டு வியந்து, அவள் தெய்வமாகியப் பின் கண்ணகியை வழிபடுவது இங்கு வியப்பினை உண்டாக்குகின்றது.

கண்ணகியின் கற்பு நெறிகள், வாழ்வியல் முறைகளிலுள்ள தரத்தினைக் கொண்டு கவுந்தியடிகள் "கற்புக்கடம் பூண்ட தெய்வம்" என கண்ணகியை புகழ்ந்து, மாதரியிடம் இருவரையும் விட்டுச்செல்கிறார். இங்கு கவுந்தியடிகள் கண்ணகியின் நெறிகளைக் கண்டு வியந்தே இவ்வார்த்தையினைக் கூறுகின்றார் என்பதன் மூலமாக இம்மெய்ப்பாடு இங்கு விளக்கப்படுகின்றது.

**அச்சம்**

அச்சம் என்பது பொதுவாகப் பயத்தினைக் குறிக்கும் சொல்லாக உள்ளது. அழுகை எனும் மெய்ப்பாட்டின் பயன் இக்காப்பியத்தில் பல இடங்களில் உள்ளதைப்போல, அச்சத்தின் பயன்பாடும் பல இடங்களில் உள்ளது. இவை, இக்காப்பியத்தை மேலும் சுவையூட்டும் விதமாக இளங்கோவடிகளால் இயற்றப்படுள்ளது.

**அடர்ந்தெழு குருதி யடங்காப் பசுந்துணிப்**
**கணவனை யிழந்தாள் கடையகத் தாளே** (வழக்குரை காதை பா.எண் 34-43)

எனும் வரிகள் அரண்மனையின் வாயிற்காவலனின் பயத்தை வெளிக்காட்டுகின்றது. அதாவது, மிகுந்த கோபத்துடனும், தலைவிரிக்கோலத்துடனும் கையில் ஒற்றை சிலம்பினை ஏந்தி பாண்டியனது அரண்மனையை நோக்கி வந்த கண்ணகியின் வருகையைப் பற்றி வாயிற்காவலன் மன்னனிடம் தெரிவிக்கும் பொழுது அவன் பயன்படுத்திய வார்த்தைகளின் மூலமாக அவனது அச்சம் சிறப்பாக வெளிக்காட்டப்பட்டுள்ளது. மேலும் கண்ணகியைப் பற்றி விவரிக்கும் முன்பாக, மன்னனைப் புகழும் நேரத்தில் அவனது மனப்போராட்டம், பயம், தடுமாற்றம் ஆகியன அழகுற எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இங்கு வாயிற்காவலனது மெய்ப்பாடு அணங்கினால் வந்த அச்சமாக உள்ளது.

கண்ணகி, கோவலன் மற்றும் கவுந்தியடிகளின் பயணத்தில் கண்ணகியும் கவுந்தியடிகளும் களைப்பினால் வழியில் ஒரு புறமாக நிற்க, கோவலன் மட்டும் தண்ணீர் பருக வேண்டி நதிக்கரையை நோக்கி நடக்கின்றான். அப்பொழுது அங்கிருந்த வனதேவதை ஒருத்தி கோவலனின் அழகினைக்கண்டு மயங்கி, இவன் தமக்கு இன்பமளிப்பான் என எண்ணி வசந்தமாலையைப் போல் கோலம் பூண்டு, கோவலன் முன் தோன்றி சில நாடகங்களை அரங்கேற்றியுள்ளாள். இதனையறிந்த கோவலன், "அந்தரி" மந்திரத்தைச் சொல்ல பயங்கொண்ட வனதேவதை "நான் வனதேவதை தான். இங்கு நடந்தவற்றை உனது மனைவியான கண்ணகியிடமும், கவுந்தியடிகளிடமும் சொல்லவேண்டாம்" என வேண்டி நிற்கிறாள். இங்கு கோவலனை ஏமாற்ற அஞ்சாத வனதேவதை, கண்ணகியின் கற்பொழுக்கத்திற்கும், கவுந்தியடிகளின் தவ வலிமைக்கும் அஞ்சி நிற்பது

புலப்படுகின்றது.

கணவனை இழந்த கண்ணகி வேங்கை மரத்தடியில் நின்று கொண்டிருப்பதைக் கண்டு அப்பகுதியிலிருந்த குறவர் குல மக்கள் அஞ்சினர். பயத்துடனே கண்ணகியிடம் சென்று “நீங்கள் யார்?” என வினவ, கண்ணகி கோவம் கொள்ளாமல் பொறுமையாக நான் இன்னவள் என அவர்களிடம் விவரிக்கிறாள். கண்ணகியின் நிலைகளை அறிந்த அக்குறக்குல மக்கள் கண்ணகியை அச்சத்துடன் தெய்வமாக எண்ணி வழிபடுகின்றனர் என்பது மூலமாக அம்மக்களின் அச்சம் கொண்ட மெய்ப்பாடு விளக்கப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் இன்னும் பல இடங்களில் அச்சம் எனும் இந்த மெய்ப்பாடானது சிறப்பாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**பெருமிதம்**

பெருமிதம் எனும் சொல்லானது மெய்ப்பாட்டியலில் வீரம், தறுகண் (அஞ்சாமை) போன்ற பொருள்களைக் கொண்டதாக அமைகின்றது. பெருமிதம் எனும் மெய்ப்பாடும் சிலப்பதிகாரக் காப்பியத்தில் அழகாகக் காட்டப்பட்டுள்ளது. பல இடங்களில் மூவேந்தர்களின் பெருமிதங்களையும், வீரத்தையும், கொடைப்பண்புகளையும் எடுத்துரைக்கும் விதத்தில் பலக் குறிப்புகள் இங்கு உள்ளன. இதுவே பெருமிதம் எனும் மெய்ப்பாடு சிலப்பதிகாரத்தில் கையாளப்பட்டுள்ளதைத் தெளிவுப்படுத்துகிறது.

செய்யாத தவறுக்காக தனது கணவன் கொல்லப்பட்டதை அறிந்த கண்ணகி, பல கோபங்களுடனும், கேள்விகளுடனும் அஞ்சா நெஞ்சம் கொண்டு பாண்டிய மன்னனை கேள்வி கேட்கும் மனநிலை கொண்டிருந்தாள். இது கண்ணகியின் தறுகண் நிலையினை விளக்கிக் காட்டுகின்றது.

மாடலன், நீலன் மற்றும் தூதுவர்கள் சேர மன்னனைப் பார்க்கச்சென்ற பொழுது, நீலன் சொல்லும் கனகவிசயர் கதையைக்கேட்டு மன்னன் கடுங்கோபம் கொள்கிறான். இதனையறிந்த மாடலன், மன்னனிடம் கோவத்தைத் தணிக்க பல அறிவுறுத்தல்களை செய்துள்ளார்.இதன் வழியே மன்னன் எனவும் பாராமல் அறிவுரைகளை வழங்கிய அஞ்சா நெஞ்சம் மற்றும் அவன் கொண்டுள்ள மனத்திரத்தின் மூலமாக மாடலனின் வழியாக பெருமிதம் எனும் மெய்ப்பாடு வளர்க்கப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் இன்னும் சில இடங்களில் இம்மெய்ப்பாடானது விளக்கிக்காட்டப்பட்டுள்ளது என்பது இக்காப்பியத்திற்கும் பெருமைகளைத் தேடித்தருகிறது.

**வெகுளி**

வெகுளி என்றால் சினம், கோபம், ரௌத்திரம் போன்ற பொருள்களைக் கொண்டதாக உள்ளது. எதிர்மறையான முடிவினைக் கொண்ட சிலப்பதிகாரத்தில் பல சினங்களைத் தொடர்ந்து தான் எதிர்மறையாக முடிக்கப்பட்டுள்ளது. சினத்தால் தன்னிலை மறந்து செய்த செயல்கள் இதற்கு முக்கியப்பங்கு வகிக்கின்றது.

**வாயிலோயே! வாயிலோயே!**
**யறிவிப் பாயே! யறிவிப்பாயே!** (வழக்குரை காதை பா.எண்.24-29)

எனும் வரிகள் கண்ணகியின் பெருஞ்சினம் வெளிப்படுத்தப்படுகிறது. கோவலன் கொலையுண்டதை அறிந்து பெருஞ்சினம் கொண்டு கையில் ஒற்றை சிலம்புடன் பாண்டிய மன்னனின் அரண்மனை

வாயிலில் நின்றாள் கண்ணகி. பெருங்கோபத்துடன் வாயிற்காவலனிடம், முறை தவறிய நீதியினால் கணவனை இழந்தவள் வாயில் நிற்கிறாள் என மன்னனிடம் சொல்லக்கேட்கிறாள் கண்ணகி.

மேலும் உயர் சினத்திலிருக்கும் கண்ணகியின் வார்த்தைகளைக் கேட்ட பாண்டிய மன்னன் தான் தண்டனை வழங்கியதில் தவறொன்றுமில்லை எனக்கூறியது கண்ணகியை மேலும் கோபமுறச் செய்கிறது. இப்பகுதிகளைப் படிக்கும் பொழுதே அதிலுள்ள கண்ணகியின் சினத்தை நம்மால் உணர இயலும்.

**வடதிசை மருங்கின் மன்னர்தம் முடிதலைக்**

**கடவுளெழுத்வோர் கற்கொண்டல்லது** (கால்கோட் காதை பா.எண்.13-14)

எனும் வரிகள் சேர செங்குட்டுவனின் வஞ்சினத்தை விளக்குமாறு அமைந்துள்ளது. அதாவது தமிழ் மன்னர்களைப் பழித்த ஆரிய மன்னனான கனகவிசயரின் மேல் பெருங்கோபம் கொண்டு, வடதிசைச் சென்ற சேரமன்னன் பத்தினி தெய்வமாகிய கண்ணகிக்குச் சிலை வடிக்க வேண்டியக் கல்லை கனகவிசயரின் தலையால் சுமந்து வரச் செய்துள்ளார். தமிழ் மன்னர்களைப் பழித்ததால் கோபம் தாங்க இயலாமல் ஆரிய மன்னன் எனவும் பாராமல் இவ்வாறு செய்தது மன்னனின் கோவத்தை பெரியளவில் வெளிப்படுத்துகிறது. மேலும் சிலப்பதிகாரத்தின் பல இடங்களில் சினம் மிகுந்து எழும் மெய்ப்பாடுகளை நம்மால் உணர முடியும்.

**உவகை**

மகிழ்ச்சி எனும் பொருளைக் கொண்டதே உவகை ஆகும். சிலப்பதிகாரத்தில் பரவலாக ஆங்காங்கே மன்னர்களின் வெற்றி, கொடைத்தன்மை போன்ற செயல்களை மக்கள் கொண்டாடி மகிழ்ந்து வாழ்ந்து வந்ததைப் பற்றியக் குறிப்புகள் உள்ளன.

**மாயிரும் பீலி மணி நிற மஞ்ஞைநின்**

**உடனுறைவு மரீஇ ஒருவா ஆயின** ( மனையறம் படுத்த காதை பா. எண்.53)

எனும் வரிகள் கண்ணகியின் அழகை வர்ணித்து அதீத காதலுடன் மனமகிழ்ந்து இருவரும் வாழ்ந்து வந்ததை வெளிக்காட்டுகிறது. இதில் கோவலனது காதல் மிகுதியாக வெளிப்படுத்தப்படிருக்கும். இவர்களில் இல்வாழ்க்கையில் உவகை மெய்ப்பாட்டினைப் பற்றி பல இடங்களில் குறிப்புகள் உள்ளன.

**மாதர்க் கொடுங்குழை மாதவி தன்னோடு**

**திரதரும் மருபிற் கோவலன்** (இந்திரவிழாவூரெடுத்த காதை பா.எண். 190-201)

எனும் வரிகள் கலை, அழகு என அனைத்திலும் சிறப்புறிருந்த மாதவி கோவலனுடன் மிக அழகிய காதல் நிறைந்த வாழ்க்கை நடத்தி வந்துள்ளது புலப்படுகிறது. இதில் பரத்தைப் போன்று கோவலனிடம் இல்லாமல் முறையான காதலிப் போன்ற உறவினைக் கொண்டிருந்தாள் மாதவி. இருவரும் மிகுந்த மனமகிழ்வுடன் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதன் வழியே உவகை எனும் மெய்ப்பாடு அறியலாகின்றது. இன்னும் சில இடங்களில் உவகைக்கான தடயங்கள் இக்காப்பியத்தில் இருக்கின்றன.

**முடிவுரை**

தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள மெய்ப்பாடுகள் நாட்டியத்திற்கு முக்கிய உயிராக விளங்குகின்றது. இம்மெய்ப்பாடுகளை தமிழ் இலக்கிய நூல்களில் பரவலாக நாம் காணலாம். அவற்றில் சிலப்பதிகாரத்தில் தொல்காப்பியர் குறிப்பிடும் மெய்ப்பாடுகள் மிகச்சிறந்த முறையில் முதன்மை கதாபாத்திரங்கள், துணைமை கதாபாத்திரங்கள் மூலமாக வெளிப்படுகிறது. இவற்றைப் பார்க்கும்பொழுது பல மெய்ப்பாட்டு நிலைகள் இளங்கோவடிகளால் எடுத்தாளப்பட்டது தெரியவருகிறது. எண்வகை மெய்ப்பாடுகளுள் அழுகை எனும் அவல நிலையும், வெகுளி எனும் சினம் சார்ந்தவைகளுமே அதிகளவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து அச்சம் எனும் மெய்ப்பாடே அதிகமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. மிகக்குறைந்த அளவில் நகை எனும் சிரிப்பு தொடர்பான மெய்ப்பாடு வெளிப்படுகிறது. இவ்வாறாகவே இளங்கோவடிகளால் சிலப்பதிப்பதிகாரத்தில் மெய்ப்பாடுகள் கையாளப்பட்டுள்ளது.

**துணை நூற்பட்டியல்**

1. https://tamilkaru.blogspot.com/2020/03/tamilmeipattiyal.html?m=1
2. நா.சுப்பு ரெட்டியார், கவிதையனுபவம், பக்.26
3. சிலப்பதிகாரம், புகார் காண்டம்
4. சிலப்பதிகாரம், வஞ்சி காண்டம்
5. சிலப்பதிகாரம், மதுரை காண்டம்
6. முனைவர். இரா. சந்திரசேகரன், ப.சரவணன், சிலப்பதிகாரத்தில் மெய்ப்பாடுகள்
7. தெ.பொ.மீனாட்சி சுந்தரன், குடிமக்கள் காப்பியம்

**திறவுச்சொற்கள் :** சிலப்பதிகாரம், மெய்ப்பாட்டியல், இரசம், சுவை